**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.5/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : V.C.R கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**22.09.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

4. பிராதுடன் தாக்கல் செய்திருந்த வழக்கு சொத்திற்கான புகைப்படங்கள் (2 எண்ணம்) மற்றும் குறுந்தகடு தாக்கல் செய்கிறேன். **(புகைப்படங்கள் (2 எண்ணம்) மற்றும் குறுந்தகடு வா.சா.ஆ 12 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65–பி ன் கீழான சான்று தாக்கல் செய்கிறேன். **(சான்று வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.02.2024ம் தேதியிட்டு என் மருமகள் ஜெயந்தி திருத்தணி காவல் உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)